## சுருக்கம்

வனம் – சிவகங்கை மாவட்டம் – தேவகோட்டை வட்டம் - 38-கப்பலூர் கிராமம்– கப்பலூர் பிட்–1, பிட்–II, பிட்–III வன வட்டாரம் – நில அளவை எண்கள் 79, 47, 157 மற்றும் 135–ல் உள்ள 88.31.5 எக்டர் நிலம் – தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் காப்பு வனமாக அமைத்து அறிவிக்கை செய்தல் - ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை**

அரசாணை (நிலை) எண்.46

நாள்: 08.03.2023
சுபகிருது , மாசி – 24
திருவள்ளுவர் ஆண்டு–2054

படிக்க.:

1. அரசாணை (நிலை) எண்.80, சுற்றுச்சூழல் மற்றும் வனத்(வனம்.14) துறை, நாள். 23.06.2017.
2. முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–15. கடித எண்.டிஎஸ்2/15309/ 2022, நாள். 23.03.2022.

=======

**ஆணை :**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட முதன்மை தலைமை வனப்பாதுகாவலரின் கருத்துருவுடன் பெறப்பட்ட சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை வட்டம், 38–கப்பலூர் கிராமம், கப்பலூர் பிட்–I, பிட்–II, பிட்–III வன வட்டாரம், நில அளவை எண்கள். 79, 47, 157, மற்றும் 135–ல் உள்ள 88.31.5 எக்டேர் நிலம் தமிழ்நாடு வனச்சட்டம், 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882), பிரிவு 16–ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழ் நாள் 05.04.2023–ல் ஆங்கிலத்திலும், சிவகங்கை மாவட்டம் அரசிதழ் நாள் 19.04.2023–ல் தமிழிலும் வெளியிடும் பொருட்டு இத்துடன் இணைக்கப்படுகிறது.

2. 05.04.2023–ந் தேதிய தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்படுவதை உறுதி செய்யுமாறு சென்னை அரசு மைய அச்சகத்தின் பணி மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். அறிவிக்கை கிடைக்கப் பெற்றவுடன்

..2.

அதனை தமிழில் சிவகங்கை மாவட்ட அரசிதழில் வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு மதுரை அரசு கிளை அச்சக மேலாளர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

3. மேலும், அச்சிடப்பட்ட தமிழ், ஆங்கில அறிவிக்கை நகல்களை இணைப்பில் தெரிவிக்கப்பட்டுள்ள அலுவலர்களுக்கு அனுப்பி வைக்க மைய, கிளை அச்சக பணி மேலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

4. அறிவிக்கையானது தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுவதை சிவகங்கை மாவட்ட ஆட்சியர் / முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் கண்காணித்து அறிவிக்கை வெளியிடுவதில் காலதாமதம் இருப்பின், அரசின் கவனத்திற்கு கொண்டு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

(ஆளுநரின் ஆணைப்படி)

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

<u>பெறுநர்:–</u>
பணி மேலாளர், அரசு மைய அச்சகம்,
சென்னை – 1.
கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், மதுரை.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்
மற்றும் ஆணையர், நில நிர்வாகம், சென்னை – 5.
முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்),
சென்னை – 32.
மாவட்ட ஆட்சியர், சிவகங்கை.
வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர்,
திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை.
மாவட்ட வன அலுவலர், சிவகங்கை.
வன நிர்ணய அலுவலர், சிவகங்கை.

<u>நகல்:–</u>
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (LD–IV) துறை,
சென்னை–9.
சட்டத் (Opinion) துறை, சென்னை–9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் ( மொழிபெயர்ப்பு)துறை,
சென்னை–9.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை–9.
(கோ.எண்.15633/வனம்.14/2022)
இருப்புக்கோப்பு/ உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்
10/03/2023

..3.

**அரசு ஆணை (நிலை) எண்.46**

**சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத் (வனம்.14) துறை, நாள். 08.03.2023–ன் இணைப்பு**

| வ. எண். | பதவி மற்றும் அலுவலக முகவரி | ஆங்கிலம் | தமிழ் |
|---|---|---|---|
| 1 | அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை, சென்னை -9. | 2 | 2 |
| 2 | முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் (வனத்துறைத் தலைவர்), சென்னை–32. | 3 | 3 |
| 3 | மாவட்ட ஆட்சியர், சிவகங்கை. | 2 | 2 |
| 4 | வனப்பாதுகாவலர் மற்றும் கள இயக்குநர், திருவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பகம், மதுரை. | 5 | 5 |
| 5 | மாவட்ட வன அலுவலர், சிவகங்கை. | 12 | 12 |
| 6 | வன நிர்ணய அலுவலர், சிவகங்கை. | 8 | 8 |

**சுப்ரியா ஸாஹு**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**//உண்மை நகல்//**

பிரிவு அலுவலர்

10/03/2023

**பிற்சேர்க்கை.**

**அறிவிக்கை.**

தமிழ்நாடு வனச்சட்டம் 1882 (தமிழ்நாடு சட்டம் 5/1882) பிரிவு 16–ன் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் கீழே விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாற்புற எல்லைகளுக்குள் அடங்கியுள்ள நிலப்பகுதியை 06.09.2023 நாளிலிருந்தும் அந்நாள் முதற்கொண்டும் காப்புவனமாக இதனால் அறிவிக்கிறார்.

**அட்டவணை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மாவட்டத்தின் பெயர் | : | சிவகங்கை | | |
| 2. | வட்டத்தின் பெயர் | : | தேவகோட்டை | | |
| 3. | எண் மற்றும் கிராமத்தின் பெயர் | : | 38, கப்பலூர் | | |
| 4. | வன வட்டாரத்தின் பெயர் | : | கப்பலூர் துண்டு–1, துண்டு –II, துண்டு –III வன வட்டாரம் | | |
| 5. | நில அளவை எண் மற்றும் வன வட்டாரத்தின் பரப்பு | : | **துண்டு எண்** | **நில அளவை எண்கள்** | **பரப்பளவு ஹெக்டரில்** |
| | | | துண்டு – I | 79 | 43.28.5 ஹெக்டர் |
| | | | துண்டு – II | 47 | 7.61.5 ஹெக்டர் |
| | | | | 157 | 20.70.5 ஹெக்டர் |
| | | | துண்டு –III | 135 | 16.71.0 ஹெக்டர் |
| | | | **மொத்தம்** | | **88.31.5 ஹெக்டர்** |
| 6. | பகுதியின் மொத்த பரப்பளவு | | துண்டு – I | | 43.28.5 ஹெக்டர் |
| | | | துண்டு – II | | 28.32.0 ஹெக்டர் |
| | | | துண்டு –III | | 16.71.0 ஹெக்டர் |
| | | | **மொத்தப் பரப்பளவு** | | **88.31.5 ஹெக்டர்** |

**நாற்புற எல்லைகள்**

துண்டு – I நில அளவை எண் 79, பரப்பளவு. 43.28.5 ஹெக்டர்

வடக்கு.– இவ்வன வட்டாரத்தின் எல்லையானது எண்.38, கப்பலூர் கிராம நில அளவை எண்.79–ன் வடமேற்கு மூலையும், எண்.35 சிறுகானூர் கிராம நில அளவை எண்.187 ஆகியவை சந்திக்கும் சந்திப்பு புள்ளியிலிருந்து தொடங்கி, கிழக்கு திசையில் எண்.35 சிறுகானூர் கிராம நில அளவை எண்.187–ன் தெற்கு பக்கமாக பொதுவாக சென்று எண்.35 சிறுகானூர் கிராம நில அளவை எண்.187–ன்,

எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 79 மற்றும் 81 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

<u>கிழக்கு</u>.– பின்னர் இவ்லெல்லையானது தெற்கு திசையில் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 81 மற்றும் 80–ன் மேற்கு பக்கமாக சென்று எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 81, 74, 79 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

<u>தெற்கு</u>.– பின்னர் இவ்வெல்லையானது மேற்கு திசையில் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்.74–ன் வடக்கு பக்கம், நில அளவை எண்.76–ன் கிழக்கு மற்றும் வடக்கு பக்கம், நில அளவை எண்.78–ன் வடக்கு பக்கமாக சென்று எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 78 மற்றும் 79 மற்றும் எண்.35 சிறுகானூர் கிராம நில அளவை எண்.187 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

<u>மேற்கு</u>.– அதன்பின் இவ்வெல்லையானது பொதுவாக வடக்கு திசையில் எண்.35 சிறுகானூர் கிராம நில அளவை எண்.187–ன் கிழக்கு பக்கமாக சென்று தொடங்கிய இடத்தை அடைகிறது.

<u>**துண்டு – II**</u>

| | | |
|---|---|---|
| நில அளவை எண் 47 | : | 7.61.5 ஹெக்டர் |
| நில அளவை எண் 157 | : | 20.70.5 ஹெக்டர் |
| மொத்தம் | : | 28.32.0 ஹெக்டர் |

<u>வடக்கு</u>.–

இவ்வனவட்டாரத்தின் எல்லையானது எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 33, 48, மற்றும் 47 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியில் தொடங்கி கிழக்கு திசையில் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 48, 140, 155, 148 மற்றும் 158–ன் தெற்கு பக்கமாக சென்று எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 157, 158 மற்றும் 159 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

<u>கிழக்கு மற்றும் தெற்கு.–</u>

பின்னர் இவ்வெல்லையானது தெற்கு திசையில் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்.159–ன் மேற்கு மற்றும் வடக்கு பக்கமாக சென்று எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 159, 42 மற்றும் 47 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

மேற்கு.–

பின்னர் இவ்வெல்லையானது வடக்கு திசையிலும் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 42, 46, 45, 34, 33–ன் கிழக்கு பக்கமாகவும் சென்று தொடங்கிய இடத்தை அடைகிறது.

துண்டு – III நில அளவை எண் 135 பரப்பளவு 16.71.0 ஹெக்டர்

வடக்கு.–

இவ்வனவட்டாரத்தின் எல்லையானது எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 135. 178, 158, 136 மற்றும் 118 ஆகியவை சந்திக்கும் சந்திப்பு புள்ளியில் துவங்கி, கிழக்கு திசையில் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 118, 124, 134–ன் தெற்கு பக்கமாக சென்று எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 135, 134 மற்றும் எண்.40 கண்டியூர் கிராம நில அளவை எண்.1 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

கிழக்கு.–

பின்னர் இவ்வெல்லையானது தெற்கு திசையில் எண்.40 கண்டியூர் கிராம நில அளவை எண்.1–ன் மேற்கு பக்கமாக சென்று எண்.40 கண்டியூர் கிராம நில அளவை எண்கள் 1, 2 மற்றும் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்.135 ஆகியவை சந்திக்கும் முச்சந்திப்பு புள்ளியை அடைகிறது.

தெற்கு மற்றும் மேற்கு.–

அதன்பின் இவ்வெல்லையானது மேற்கு திசையில் எண்.40 கண்டியூர் கிராம நில அளவை எண்.2–ன் வடக்கு பக்கமாகவும் எண்.38 கப்பலூர் கிராம நில அளவை எண்கள் 179 மற்றும் 178–ன் வடக்கு பக்கமாகவும் சென்று தொடங்கிய இடத்தை அடைகிறது.

அனுமதிக்கப்பட்ட உரிமைகள்:

இவ்வன வட்டாரத்தில் கீழ்கண்ட நான்கு உரிமைகள் அனுமதிக்கப்படுகிறது

உரிமை எண்.1 : துண்டு 1 வன வட்டாரத்தில் உள்ள கண்ணங்குடி முதல் தேவகோட்டை சாலை:

கண்ணக்குடி முதல் தேவகோட்டை வரையிலான வாகன போக்குவரத்து சாலையினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. இச்சாலை எண்.38, கப்பலூர் கிராம நில அளவை எண்.157–ன் தென்கிழக்கு எல்லையிலிருந்து 77.2 மீட்டர் வெட்டளவில் தொடங்கி மேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கிச் சென்று இவ்வன வட்டாரத்தின் தென்மேற்கு

புறத்திலிருந்து 36.0 மீட்டர் வெட்டளவில் உள்ள ஒரு வட்டத்தை அடைகிறது. சிவகங்கை, மாவட்ட வன அலுவலரிடமிருந்து எழுத்து வடிவிலான முன்னனுமதி பெற்ற பின்னர் பராமரிப்பு காப்பு முக்கிய பணிகள் மேற்கொள்ள ஊரக வளர்ச்சி மற்றும் நெடுஞ்சாலைத்துறைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. கண்ணக்குடி முதல் தேவகோட்டை வரையான வாகன போக்குவரத்து சாலையின் மொத்த நீளம் 1165.85 மீட்டர் மற்றும் அகலம் 30 மீட்டர் ஆகும். இச்சாலையின் காந்த கோண அளவுகள் மற்றும் நீளம் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு வருகிறது.

| தொடர் எண். | நிலையம் (இடையில்) | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1. | 1 முதல் 2 வரை | $283.05^0$ | 67.16 | 30.00 |
| 2. | 2 முதல் 3 வரை | $281.20^0$ | 347.49 | 30.00 |
| 3. | 3 முதல் 4 வரை | $280.99^0$ | 290.70 | 30.00 |
| 4. | 4 முதல் 5 வரை | $259.35^0$ | 460.50 | 30.00 |
| மொத்தம் | | | 1165.85 | |

<u>உரிமை எண். 2 : துண்டு 2 வன வட்டாரத்தில் உள்ள மின்பாதை:</u>

தற்போதுள்ள மின்பாதைக்கு உரிமை வழங்கப்படுகிறது. இம்மின்பாதையானது எண்.38, கப்பலூர் கிராமத்தின் நில அளவை எண்.157-ல் உள்ள வனவட்டாரத்தின் கிழக்கு பகுதியில் தொடங்கி மேற்கு மற்றும் தென்மேற்கு நோக்கி எண்.38, கப்பலூர் கிராம நில அளவை எண். 47-ன் வடகிழக்கு எல்லையை அடைகிறது. சிவகங்கை, மாவட்ட வன அலுவலரிடமிருந்து எழுத்து வடிவிலான முன்னனுமதி பெற்ற பின்னர் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு உரிமை அளிக்கப்படுகிறது. இந்த அனுமதிக்கப்பட்ட மின் பாதையானது மொத்தம் 1219.66 மீட்டர் நீளமாகும். மின் பாதையின் காந்த கோண அளவுகள் மற்றும் நீளம் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

| தொடர் எண். | நிலையம் (இடையில்) | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம் (மீட்டரில்) |
|---|---|---|---|
| 1. | 1 முதல் 2 வரை | 282.670 | 408.34 |
| 2. | 2 முதல் 3 வரை | 283.100 | 334.57 |
| 3. | 3 முதல் 4 வரை | 258.030 | 411.75 |
| 4. | 4 முதல் 5 வரை | 259.710 | 65.00 |
| மொத்தம் | | | 1219.66 |

**உரிமை எண். 3 : துண்டு 3 வன வட்டாரத்தில் உள்ள தேவக்கோட்டை முதல் ஆரக்கோட்டை வரையிலான சாலை**

தேவக்கோட்டை முதல் ஆரக்கோட்டை வரையிலான வாகன போக்குவரத்து சாலையினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்கப்படுகிறது. இச்சாலை இவ்வனவட்டாரத்தின் தென்கிழக்கு பகுதியிலிருந்து 40.0 மீட்டர் வெட்டளவில் தொடங்கி மேற்கு மற்றும் தெற்கு நோக்கிச் சென்று எண்.38, கப்பலூர் கிராம நில அளவை எண்.178-ன் வட மேற்கு பகுதியை சென்றடைகிறது. சிவகங்கை, மாவட்ட வன அலுவலரிடமிருந்து எழுத்து வடிவிலான முன்னனுமதி பெற்ற பின்னர் பராமரிப்பு/மேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு ஊரக வளர்ச்சித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறைக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. தேவக்கோட்டை முதல் ஆரக்கோட்டை வரையிலான இந்த வாகன போக்குவரத்து சாலையின் மொத்த நீளம் 899.23 மீட்டர் மற்றும் அகலம் 30 மீட்டர் ஆகும். காந்த கோண அளவுகள் மற்றும் நீளம் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

| தொடர் எண். | நிலையம் | காந்த கோண அளவுகள் (பாகையில்) | நீளம் தூரம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1. | 1 முதல் 2 வரை | 86.650 | 367.97 | 30.00 |
| 2. | 2 முதல் 3 வரை | 90.490 | 485.66 | 30.00 |
| 3. | 3 முதல் 4 வரை | 45.600 | 45.60 | 30.00 |
| மொத்தம் | | | 899.23 | |

**உரிமை எண்.4, துண்டு 3-ல் உள்ள கால்வாய்**

இந்த வன வட்டாரத்தின் வழியாக செல்லும் கால்வாய்க்கு அனுமதி அளிக்கப்படுகிறது. இக்கால்வாயானது எண்.38 கப்பலூர் கிராமத்தின் நில அளவை எண்.118-இன் தெற்கு எல்லையிலிருந்து தொடங்கி கிழக்கு மற்றும் வடகிழக்காக சென்று இவ்வனவட்டாரத்தின் கிழக்கு பகுதியை சென்றடைகிறது. சிவகங்கை மாவட்ட வன அலுவலரிடமிருந்து எழுத்து வடிவிலான முன்னனுமதி பெற்ற பின்னர் சீரமைப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறைக்கு அனுமதியளிக்கப்படுகிறது. இந்த கால்வாயின் மொத்த நீளம் 836.51 மீட்டர் மற்றும் அகலம் கால்வாய் 05.00 மீட்டர் ஆகும். காந்த கோண அளவுகள் மற்றும் நீளம் குறித்த விவரங்கள் கீழ்க்கண்டவாறு:-

| தொடர் எண். | நிலையம் | காந்த கோண அளவுகள் (பாகையில் | நீளம் (மீட்டரில்) | அகலம் (மீட்டரில்) |
|---|---|---|---|---|
| 1. | 1 முதல் 2 வரை | 101.410 | 230.80 | 5.00 |
| 2. | 2 முதல் 3 வரை | 89.290 | 536.63 | 5.00 |
| 3. | 3 முதல் 4 வரை | 5.790 | 69.08 | 5.00 |
| மொத்தம் | | | 836.51 | |

சுப்ரியா ஸாஹூ
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்
10/03/2023